# எத்தனை சூடு பட்டாலும் திருந்தாத 'ஜென்மம்!'

நாம் அண்ணாமலையை அரைக்கால் வேக்காட்டு அரசியல் தலைவர், கூமுட்டை என்றெல்லாம் குறிப்பிட்டு அதற்கான ஆதாரங்களுடன் செய்திக் கட்டுரைகள் வெளியிட்டபோது,

'என்ன இருந்தாலும் அவர் ஒரு அகில இந்திய அரசியல் கட்சியின் மாநிலத் தலைவர், ஒன்றியத்தை ஆளும் கட்சியைச் சார்ந்தவர். ஐ.பி.எஸ். படித்ததாகக் கூறிக் கொள்பவர், சிறிது காலம் காவல் துறை அதிகாரியாக பணியாற்றியவர். அவரை இத்தனை தரம் தாழ்த்தி விமர்சிக்கலாமா?' – என்று சிலர் எண்ணியிருக்கக் கூடும்! உண்மைதான்!

ஒருவர் தகுதிக்கு மீறிய பதவியை அவர் தலையில் சுமத்திய பிறகு, அந்த நபர் அந்தப் பதவியின் பெருமையைக் காத்திடவாவது தனது சின்னபுத்தி தனத்திலிருந்து தன்னை மாற்றிக் கொள்ள முயற்சி செய்திட வேண்டும்!

**"இல்லை... இல்லை... அது என் ஜென்மத்தோடு பிறந்தது. யார் எதைக் கொண்டு அடித்தாலும் அதனை மாற்ற இயலாது." என்ற பாணியில் தொடர்ந்து செயல்பட்டுக் கொண்டிருக்கும்**


ஒன்றிய அமைச்சர் சாந்தனு தாகூர்

**இத்தகைய பேர்வழிகளை அடையாளப் படுத்த, 'அரைக்கால் வேக்காடு' 'கூமுட்டை' போன்ற வார்த்தைகள் கூட கொஞ்சம் தரமுள்ள வார்த்தைகளாக வேத் தெரிகிறது. அந்த அளவு ஒரு அரசியல் கட்சியின் தலைமைப் பதவியைத் தொடர்ந்து கொச்சைப்படுத்திக் கொண்டிருக்கிறார்; அந்த நபர்!**

**மல்லாந்துப் படுத்துக்கொண்டு இரு கைகளாலும் மலத்தை வாரி மேல் நோக்கி வீசுவோர் மற்றும் கண்ணாடி வீட்டிலிருந்து கல் எறியும் நபர்களை எந்த வகையில் சேர்ப்பதோ அந்த ரகப் புத்தி பேதலித்தப் பேர்வழியாகவே தொடர்ந்து காரியமாற்றிக் கொண்டிருக்கிறார்!**

எத்தனையோ சூடுபட்டும் நல்ல மாட்டுத்தனம் சிறிதும் அவரிடமிருந்து வெளிப்படுவதாகத் தெரியவில்லை! நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் அவரது தலைமையிலான கட்சிக்கு தமிழ்நாட்டு மக்கள் கொடுத்த மரண அடியில் மனிதரின் மூளை முற்றிலும் கலங்கிப் போய்விட்டது போலிருக்கிறது. அதனால்தான் தான் செய்யும் காரியங்கள் மற்றும் பேசும் பேச்சின் பின்விளைவுகளைப் பற்றி சிறிதேனும் சிந்திக்காமல் வார்த்தைகளைக் கொட்டிவிட்டு, அவதூறுகளை வாந்தி எடுத்துவிட்டு – பின்னர் தான்



எடுத்த வாந்தி தன் மீதே வழிந்தோடும் நிலையில் ஒரு அசிங்க உருவாகக் காட்சியளிப்பது அவரது வாடிக்கையாகி வருகிறது.

அண்ணாமலை போன்ற அரசியல் சிற்றறிவாளர்களைப் பெரிதுபடுத்தி அவர்களுக்கு பதிலளிக்க வேண்டுமா? – என்ற எண்ணம் கூட எழுகிறது; ஆனால் இந்த சில்லுண்டி அரசியல் வாதியைப் பெரிதுபடுத்தி இதன் பேட்டிகளையும், பேச்சுக்களையும் சில ஊடகங்கள் வெளியிடும்போது அதற்கு உரிய பதில் அளிக்க வேண்டி வருகிறது! ஏடுகளில் வந்த சில சம்பவங்களை 'பொறுக்கி' எடுத்து தி.மு.க.வில் குற்றப் பின்னணி கொண்ட 112 பேர் பட்டியல் என்று வெளியிட்டுள்ளார்; இந்தச் செய்தியை ஏடுகள் சில வெளியிட்டுள்ளன.

**அண்ணாமலை பொறுக்கிய செய்திகளில் பல petty Crime என்று கூறப்படும் அற்ப குற்றங்களாக இருப்பினும் காவல்துறையாலும் கட்சியின் சார்பிலும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப் பட்டுள்ளன!**

பல நேரங்களில் தத்துபித்தென்று பைத்யக்கார செயலில் ஈடுபட்டு, அவரைத் தலைவராக்கிய கட்சிக்கே வேட்டு வைத்துவிடுகிறார் அண்ணாமலை!

தி.மு.கழகத்தில் குற்றப் பின்னணி கொண்டோர் பட்டியலை வெளியிட்டு விட்டதாகக் கூறி தி.மு.கழகத்தை நோக்கி அவர் சுழற்றிய சவுக்கில், பலத்த அடி வாங்குவது பா.ஜ.க. என்பதுகூட தெரியாமல் உளறிக் கொண்டிருக்கிறார் அவர்! இவர் இங்கே பட்டியலிட்டால் பா.ஜ.க. எப்படி அடிவாங்கும் என கருதலாம்! எப்படி என்பதை படியுங்கள்!

அசோஷியேஷன் ஆப் டெமாக்ரடிக் ரிபார்ம் (Association of Democratic Reforms) என்னும் அமைப்பு நாடாளுமன்றத்தில் இன்று உறுப்பினர்களாக அமர்ந்திருப்போர் தந்துள்ள உறுதிச் சான்றுகளை (Affidavits) ஆராய்ந்து வெளியிட்டுள்ள தகவல்கள்படி அவர்களின் 44 சதவீதம் பேர் மீது குற்றவியல் குற்றச்சாட்டுகள், (Criminal Charges) இருப்பதாகத் தெரிவித்துள்ளது.

அதாவது தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள 514 மக்களவை உறுப்பினர்களில் 225 பேர் மீது கிரிமினல் வழக்குகள் இருப்பதாக அவர்கள் தந்த வாக்கு மூலத்திலிருந்தே தெளிவாகிறது என்றும் அவர்களில் 29 சதவீதம் பேர் கொலை, கொலை செய்ய முயற்சி, கடத்தல், பெண்களுக்கு எதிரான வன்முறை போன்ற கடுமையான குற்ற வழக்குகளை சந்தித்துக் கொண்டிருப்பவர்கள் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

**இதுபோன்ற கடுமையான குற்ற வழக்குகள் (Serious Criminal Cases) உள்ளவர்களில் 9 பேர் மீது கொலை குற்றச்சாட்டுகள் உள்ளன என்றும் அந்த 9 எம்.பி.களில் 5 பேர் பாரதிய ஜனதா கட்சியை அதாவது அண்ணாமலை எந்தக் கட்சியின் தமிழ்நாட்டுத் தலைவராக உள்ளாரோ அந்த பாரதிய ஜனதா கட்சியைச் சேர்ந்தவர்கள் என்றும் தகவல்கள் தந்துள்ளன!**


**சிலந்தி**

இவர்கள் மீது நடந்துள்ள கொலைக்கான வழக்கு என்றால் இப்போது நாடாளுமன்ற மக்களவையில் உறுப்பினராக உள்ள அதாவது எம்.பி.களாக தேர்ந்தெடுக்கப்பட்டு பதவி ஏற்றுள்ள 28 பேர் மீது கொலை முயற்சி (Attempt to Murder) வழக்குகள் உள்ளதாகவும் அந்த 28 பேரில் 21 பேர் அண்ணாமலையின் பி.ஜே.பி கட்சியை சேர்ந்தவர்கள் என்றும் அந்த ஏ.டி.ஆர். (Association of Democratic reforms) அமைப்பு தெரிவித்துள்ளது.


ஒன்றிய அமைச்சர் சுரேஷ் கோபி

**அதுமட்டுமல்ல; பிரதமர் நரேந்திர மோடியின் அமைச்சரவையில் உள்ள 71 மந்திரிகளில் 28 பேர் மீது குற்ற வழக்குகள் இருக்கின்றன. அவைகள் சாதாரண வழக்குகள் கூட அல்ல, சிலர் மீது கொலை, பெண்களுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் இருக்கின்றன.**

மோடியின் அமைச்சரவையில் உள்ள சாந்தனு தாகூர் மற்றும் சுகந்தா மஜூம்தார் மீது கொலை வழக்குகள் (IPC 307) உள்ளன. அதுமட்டுமல்ல; இந்த இருவர் மீதும் பெண்களுக்கு எதிரான குற்றச்சாட்டுகளும் உள்ளன!


ஒன்றிய அமைச்சர் சுகந்தா மஜூம்தார்

இந்த அமைச்சர்கள் மட்டுமின்றி கேரளாவிலிருந்து பி.ஜே.பி சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்டு மோடியின் 3.0 அமைச்சரவையில் அமைச்சராக உள்ள சுரேஷ் கோபி மீது பெண்களுக்கு எதிரான குற்ற வழக்குகள் நிலுவையில் உள்ளன.

மேலே குறிப்பிட்டுள்ள குற்றப் பின்னணியில் உள்ளவர்கள் பட்டியல், அண்ணாமலை வெளியிட்ட பட்டியலில் உள்ளது போன்ற 'ஜுஜுபி' குற்றங்கள் அல்ல; கொலை, கொலை செய்ய முயற்சி, பெண்களுக்கு எதிரான குற்றங்கள் போன்ற படுபயங்கர குற்றப் பின்னணியுள்ள பி.ஜே.பி.யின், ஒன்றிய அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் பட்டியலில் முக்கியமானவர்கள் மட்டுமே இங்கே குறிப்பிடப்பட்டுள்ளன. மாநிலங்கள் அளவில் கணக்கெடுக்கப்போனால் பட்டியலிட பக்கங்கள் போதாது! பாரதிய ஜனதா கட்சியா? அல்லது பாரதிய கிரிமினல் கட்சியா? என்று எண்ணத் தோன்றுமளவு அந்தப் பட்டியல் விரிந்து கொண்டே போகும். தமிழ்நாடு பாரதிய ஜனதா கட்சியைக் கூட தமிழ்நாடு பாரதிய கிரிமினல் கட்சியாக்கிய மொத்தப் பெருமையையும் தன்னையேச் சார வேண்டும் என்ற நிலையில் கட்சியின் தலைமைப் பொறுப்பை ஏற்ற உடனே பல ரவுடிகளை கட்சியில் சேர்த்துக் கொண்டவர் அண்ணாமலை என்பதை நாடறியும்! அறுவறுக்கத் தக்க நிலைக்குத் தமிழ்நாடு பா.ஜ.க.வை அண்ணாமலை தள்ளுவதைத் தாங்கிக் கொள்ள முடியாது அந்தக் கட்சியின் ஆரம்ப காலத் தலைவர்கள் பலர் பட்டும்படாமலும் ஒதுங்கியிருப்பதையும் கண்கூடாகக் காணலாம்!

பல நேரங்களில் அண்ணாமலை எதிரிகளை நோக்கி எறிந்திடும் தாக்குதல்கள் பூமராங் போல திரும்பி வந்து அவரையே தாக்கி திக்குமுக்காடச் செய்தாலும் மனிதருக்கு உறைப்பதே இல்லை! எந்த வகை ஜென்மத்தில் இவர்களைப் போன்றோரை சேர்ப்பதோ?